**தலைப்பு 16 – பாராளுமன்றம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 16 – பாராளுமன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 14 ஆந் திகதி பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த ஏற்பாடும் செலவும்**

---

பாராளுமன்றத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,860.35 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 1,731.68 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 128.67 மில்லியன் அல்லது 6.92 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,787.50 | 1,672.89 | 114.61 | 6.41 |
| மூலதனம் | 72.85 | 58.79 | 14.06 | 19.30 |
| **மொத்தம்** | **1,860.35** | **1,731.68** | **128.67** | **6.92** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்

பாராளுமன்றத்திற்கு உரிய 01601 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 39.34 | 26.14 | 28.34 | 34.15 | 175.00 | 127.42 |

## 2.3 பொது வைப்புக்கணக்கு

பாராளுமன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6000/0000/00/0015/0004/000 ஆம் இலக்க பொது வைப்புக்கணக்கின் மீதி ரூபா 3.78 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பாராளுமன்றத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

பாராளுமன்றத்தால் பின்வரும் இருப்புப் பதிவேடு நாளதுவரையாக்கபட்டிருக்காததுடன், ஏனைய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (அ) | கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் கணனி மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (இ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (ஈ) | பெறுகைகள் குழுவினதும் தொழில்நுட்ப குழுவினதும் வருகைப் பதிவேடுகள் | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டி |
| (உ) | பெறுகைகள் குழுக் கூட்ட அறிக்கைகள் | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டி |
| (ஊ) | விலைமனுக் கோரல் பதிவேடு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 வழிகாட்டி |
| (எ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஏ) | இருப்புப் பதிவேட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 454(1) |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறை ஆகியன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை.

(ஆ) சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள இடம், ஜயவடனகம பதவியணியினர் இல்லம் அமைந்துள்ள இடம் மற்றும் நுவரெலிய சென்பதி இல்லம் அமைந்துள்ள இடம் போன்ற காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரித்தினைக் கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

பாராளுமன்றத்திற்கு மீளாய்வாண்டினுள் சமர்ப்பிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 மொத்த நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 31 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 12 முதல் 100 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.5 பொது வைப்புக் கணக்கு**

இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 442,048 கூட்டுத்தொகையான 06 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

விடய இலக்கம் 01601 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓய்வு பெற்ற மற்றும் மரணமடைந்த இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 414,539 கூட்டுத்தொகையான கடன்மீதி 2004 ஆம் ஆண்டிலிருந்து 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு பாராளுமன்றம் தவறியிருந்தது.

(ஆ) சேவையை விட்டுச்சென்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 866,732 கூட்டுத்தொகையான கடன் மீதி 11 வருடங்கள் முதல் 19 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டு வரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏனைய கடன் எனக் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 104,040 தொகையான கடன் மீதியினுள் காணப்படும் 2007 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 98,540 தொகையான கடன் மீதி மீளாய்வாண்டினுள் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.7 கணக்களித்தகைமையும் நல்லாளுகையும்**

**3.7.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

பாராளுமன்றத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7.2 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கணக்காய்வு திட்டத்தினை தயாரித்தல்**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 6 மற்றும் 7 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்த கணக்காய்வுத் திட்டம் முன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டும் உரிய மாதிரி 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடக்கப்பட்டும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை வெளியிடல்**

2015 ஆம் ஆண்டிற்குரியதாக 03 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன.

**3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பாராளுமன்றத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் சில சொத்துக்கள் விளைவற்றோ அல்லது குறைப்பயன்பாட்டுடனோ காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(i) கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் அல்லது கணனியில் பதிவு செய்த திகதியிலிருந்து எதுவித விநியோகமும் இடம்பெறாத 207 பொருள் விடயங்கள் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. அந்த பொருள் விடயங்களினுள் ரூபா 3,728,225 பெறுமதியான 106 விடயங்களும், பெறுமதி குறிப்பிடப்படாத 101 விடயங்களும் காணப்பட்டன.

(ii) தேவையான இருப்பின் அளவினை மிகைத்து கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தமையால் இருப்புக்களில் 25 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவில் எஞ்சிய 301 விடயங்கள் களஞ்சியத்தில் காணப்பட்டன. இவற்றுள் 109 விடயங்களின் பெறுமதி ரூபா 389,448 தொகையாக இருந்ததுடன், எஞ்சிய 292 விடயங்களின் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அந்த அறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் 2015 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

**3.9 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணமக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 109 (ஆ) | - | புத்தகங்களிலிருந்து அகற்றும் கட்டளைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அனுப்பப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| | (ii) நிதிப்பிரமாணம் 137 | 336,459 | 10 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 762 | - | களஞ்சியத்தினுள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட இருப்புக்கள் விளைவற்றுக் காணப்பட்டன. |
| (ஆ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| | 2010 மே 24 ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | 248,839 | எரிபொருள் படிகளின் உச்ச எல்லையினை மிகைத்து செலவிடுவதற்கு அல்லது அதற்காக செலவிடப்பட்ட மேலதிக செலவினத்தை தீர்ப்பதற்கு பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்க கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டிருந்தது. |
| (இ) | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | | |
| | 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க | 2,022,535 | எரிபொருள், மின்சாரம், நீர் மற்றும் போக்குவரத்துக்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களை வருடாந்த நிதியேற்பாட்டு |

| | |
|---|---|
| சுற்றறிக்கையின் 2.1.3 ஆம் பந்தி | எல்லைகளை மீறாத வகையில் பற்றுச்சீட்டுக்கள் கிடைக்கப்பெற்று ஒரு மாத காலப்பகுதியினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும், 2014 ஆம் ஆண்டிற்கு உரிய எரிபொருள் பட்டியல்கள் 2015 மே மற்றும் யூன் மாதங்களில் தீர்க்கப்பட்டிருந்தது. |

## 3.10 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பௌதீக மற்றும் நிதி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு, செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பாராளுமன்றத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

### (அ) கூட்டங்களை நடாத்துதல்

2015 சனவரி 01 ஆந் திகதி முதல் 2015 யூன் 26 ஆந் திகதி வரை 7 ஆவது பாராளுமன்றத்தின் 41 கூட்டங்களும், 2015 செப்தம்பர் 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 8 ஆவது பாராளுமன்றத்தின் 41 கூட்டங்களுமாக 2015 ஆம் ஆண்டின் போது 82 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. அந்த 82 கூட்டங்களினதும் பங்குபற்றல் பின்வருமாறு.

| பங்குபற்றல் | 7 ஆவது பாராளுமன்றம் கூட்டப்பட்ட காலத்திற்குரிய கூட்டத்தடவைகளின் எண்ணிக்கை | 8 ஆவது பாராளுமன்றம் கூட்டப்பட்ட காலத்திற்குரிய கூட்டத்தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 76 – 100 | 6 | - |
| 101 – 125 | 3 | 3 |
| 126 – 150 | 13 | 6 |
| 151 – 175 | 12 | 19 |
| 176 – 200 | 2 | 8 |
| 201 – 225 | 5 | 5 |
| **மொத்தம்** | **41** | **41** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டிற்கான கூட்டங்களுக்கான பங்குபற்றலை பரிசோதனை செய்யும் போது, 41 கூட்டத்தடவைகளினுள் 7 ஆவது பாராளுமன்றத்தில் 2/3 இற்கும் அதிகமான அமைச்சர்கள் பங்குபற்றிய கூட்டத்தடவைகளின் எண்ணிக்கை 19 ஆகவும் 8 ஆவது பாராளுமன்றத்தில் 2/3 இற்கும் அதிகமாக பங்குபற்றிய கூட்டத் தடவைகளின் எண்ணிக்கை 32 ஆகவும் இருந்தது.

(ii) 7 ஆவது பாராளுமன்றம் நடைபெற்ற காலப்பகுதியினுள் கூட்டங்களுக்காக 100 இற்கும் குறைவான அமைச்சர்கள் பங்குபற்றிய 06 கூட்டத்தடவைகள் காணப்பட்டதெனினும், 08 ஆவது பாராளுமன்றத்தின் கூட்டத்தின் போது 100 இற்கும் அதிகமான அமைச்சர்களின் பங்குபற்றல் காணப்பட்டது.

**(ஆ) சட்ட வரைபு பணியகம்**

---------------------------------------

2015 ஆம் ஆண்டின் போது 82 நாட்கள் பாராளுமன்றக் கூட்டத் தடவைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், அரசின் 16 சட்ட வரைபுகள் மற்றும் 01 அரசியலமைப்புச் சட்டத்திலான திருத்தம் உள்ளடங்களாக 17 அதிகாரச்சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

**(இ) பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ தொலைபேசி செயலியை நிர்மாணித்தல்**

--------------------------------------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பாராளுமன்றத்திற்கான உத்தியோகபூர்வ தொலைபேசி செயலியை நிர்மாணித்தல் தொடர்பில் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் தொலைபேசி செயலியை நிர்மாணிப்பதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மதிப்பிடப்பட்ட செலவினம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பாராளுமன்றத்தின் தொலைபேசி செயலியை நிர்மணிப்பதற்காக பத்திரிக்கை அறிவித்தலின் பிரகாரம் விலைமனுக்கள் கிடைக்கப்பெற்றிராமையால் மின்னஞ்சல் மூலம் 20 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன், தொலைபேசி செயலியை நிர்மாணிக்கும் அரச நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்களை கோருவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.11. வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்**

------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு மேலதிகமாக உள்ள ஏனைய 03 நடைமுறைக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ரூபா 18,498,074 ஆன மீதியொன்று நிலவியது.

(ஆ) கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த ரூபா 192,392 கூட்டுப் பெறுமதியுடைய 11 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.12 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------------

பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையை உடையனவாக காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

### (அ) மாதிவெல இல்லங்களின் புனரமைப்பு

--------------------------------------------------------

மாதிவெல அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லத் தொகுதியில் 64 வீடுகளின் கூரைகளை புதுப்பிப்பதற்காக ரூபா 8,003,742 ஆன மொத்த மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு, சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் உதவியுடன் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 2015 நவம்பர் 20 ஆந் திகதியளவில் அந்த செயற்பாட்டிற்காக ரூபா 5,010,500 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இல்லங்களை புனரமைப்பதற்காக 11,340 கன அடி நீளமான பலகைகள் ரூபா 1,905,120 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தின் பொறியியற் பிரிவினால் புனரமைக்கப்பட்ட 08 இல்லங்களுக்காக 1546 கன அடி நீளமான பலகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்ட 56 இல்லங்களுக்காக 5600 கன அடி நீளமான பலகைகள் பயன்படுத்தப்பட்டதாக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 704,592 பெறுமதியான 4194 கன அடி நீளமான பலகைகளின் இருப்பு எஞ்சியிருந்தது.

(ii) இப்புனரமைப்பிற்காக தெஹிவலை முதல் மாதிவெல வரை 800 அஸ்பெஸ்டோஸ் தகடுகளை 2 தடவைகளில் கொண்டு செல்வதற்கும் அவற்றை ஏற்றுவதற்கும் இறக்குவதற்குமான கூலிக்காக ரூபா 196,900 மேற்படி பலகை கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த செயற்பாடு மஞ்சள் பக்கங்கள் மூலம் கூறுவிலை கோரப்பட்ட போது ஒரு தடவைக்கு ரூபா 38,000 தொகையும், கொழும்பு மாவட்ட விலை நிர்ணய குழுவின் அறிக்கையின் பிரகாரம் ஒரு தடவைக்கு ரூபா 30,000 இனை விட குறைவடையும் எனவும் வெளிப்படுத்தப்பட்டது.

(iii) மாதிவெல அமைச்சர்களுக்கான இல்லத் தொகுதியின் பழுதுபார்த்தல்களை பௌதீக ரீதியில் பரிசோதனை செய்ய சென்ற போதிலும் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காததுடன், இல்லத் தொகுதியிலிருந்து அகற்றப்பட்ட பலகைகள் மற்றும் அஸ்பெஸ்டோஸ் தகடுகள் தொடர்பில் பௌதீக ரீதியில் உறுதிப்படுத்திக் கொள்ளவும் சந்தர்ப்பமொன்று கிடைக்கவில்லை.

(iii) அமைச்சர் இல்லத் தொகுதியின் பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 623,700 தொகையான பலகைகளை கொள்வனவு செய்த போது அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (இ) இன் பிரகாரம் ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நினைவுப் பொருட்களின் விற்பனைக் கூடத்தை நவீனமயப்படுத்தல்**

----------------------------------------------------------------------------------------------------

நினைவுப் பொருட்களின் விற்பனைக் கூடத்தை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 1,693,920 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 2,539,425 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விஞ்சி ரூபா 845,505 அல்லது 50 சதவீதம் கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நினைவுப் பொருட்களின் விற்பனைக் கூடத்தின் பின்னால் அமைந்துள்ள களஞ்சியத்தில் கருங்காலி போன்ற பெறுமதி கூடிய பலகைகளைப் பயன்படுத்தி 16.12 கன அடி அளவில் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 278,070 செலவிடப்பட்டிருந்தது. நினைவுப் பொருட்கள் விற்பனைக் கூடத்தின் பின்புறத்தில் அமைந்துள்ள இக் களஞ்சியம் பிறருக்கு நேரடியாக புலப்படாமையால் அதற்காக அவ்வாறான பெறுமதியான பலகைகளை பயன்படுத்துவதற்கான தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட அளவிடைப்பத்திரத்தின் பிரகாரம் களஞ்சியத்திற்காக 9.8 கன மீட்டர்கள் நீளமுடைய 6 உலோக இறாக்கைகளைப் பொருத்துவதற்காக ரூபா 350,350 மதிப்பிடப்பட்டிருந்தது. 8.41 கன மீட்டர் நீளமாக 8 உலோக இறாக்கைகள் செய்யப்பட்டு அதற்காக ரூபா 420,500 செலுத்தப்பட்டிருந்தது. அந்த பகுதியில் போதியளவான இடவசதி இல்லாதிருந்ததுடன் கூரைத்தகடுக்கு மிகவும் அண்மிய மட்டத்தில் உயரமாக காணப்பட்ட இறாக்கைகளின் மேல் தட்டுகளில் பொருட்களை அடுக்கும் போது மீண்டும் எடுப்பதற்கு சிரமமாக இருந்தது. அந்த 06 இறாக்கைகளும் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் 08 இறாக்கைகளின் ஒன்றேனும் அந்த அறையிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

**3.13 முறையற்றக் கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------

பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

**(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல்கள் நடைமுறையிலிருந்து விலகுதல்**

--------------------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.6 வழிகாட்டலுக்கமைய ரூபா 2,699,493 தொகையான போசிலேன் பொருட்களை கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தின் போது விலைமனுக்களை திறக்கும் குழுவின் அங்கத்தவர்களால் பெயர், விபரம் குறிப்பிடப்பட்டு கையொப்பமிடப்பட்டிராததுடன் கூறுவிலை திறத்தல் குழுவின் அறிக்கையில் ஒவ்வொரு நிறுவனமும் முன்வைத்த கூறுவிலைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல்கள் கோவையின் 3.4 வழிகாட்டலின் பிரகாரம் போட்டி அடிப்படையிலான கேள்வி கோரப்படாமல் பாராளுமன்றத்தின் பதவியணிக்காக தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 84 சோடி காலணிகள் ஒவ்வொன்றும் ரூபா 2,000 வீதம் ரூபா 168,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.14 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,827,100 மற்றும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,783,665 கூட்டுத்தொகையும் செலவிடப்பட்டு எரிபொருள், பலகை, போக்குவரத்து, தளபாடங்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் உள்ளடங்களாக பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த நிறுவனம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த பொதீக உள்ளதன்மை தொடர்பான பரிசேதனையின் போது அந்த நிறுவனம் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் வியாபார நிறுவனமொன்றல்ல என்பதும், ஒரே விலாசம் ஒரே தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கத்துடன் 02 பெயர்களில் தோன்றி 03 கடித தலைப்புக்களைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் இடமொன்றென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.15 நட்டங்களும் இழப்புக்களும்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பிலான அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) தேவையான அளவை விட இருப்புப் பொருட்களுக்கு கட்டளை விடுத்து களஞ்சியப்படுத்துவதனால் 28 விடயங்கள் காலாவதியாகியிருந்தன. இவற்றுள் பெறுமதி இனங்காணப்பட்ட 20 விடயங்களால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 501,982 ஆகும்.

(ஆ) திறந்த வெளிகளில் காணப்பட்ட 3 களஞ்சியங்கள் தலைமைக் களஞ்சியத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விலகியிருந்ததுடன், அவ்வாறான இடமொன்றில் காணப்பட்ட களஞ்சியமொன்றின் பலகை இருப்பின் பரிசோதனையின் போது ரூபா 511,217 பெறுமதியான பலகைகளின் பற்றாக்குறையொன்று நிலவியது.

(இ) 2015 நவம்பர் 06 ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சொந்தமான வாகனமொன்றிற்கு ஏற்பட்ட விபத்தொன்றில் ரூபா 109,237 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், அந்த நட்டம் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.16 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்திலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான விபரம் பின்வருமாறு.

(அ) பாராளுமன்ற பிரதம செயலாளரின் பதவியணியில் சீருடைகள் உரித்துடைய பதவிகளில் உள்ள 474 உத்தியோகத்தர்களுக்காக 510 சோடி காலணிகள்

கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் 36 சோடிகளுக்கு தேவைப்பாட்டினை விஞ்சி ரூபா 98,280 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பாராளுமன்றத்தால் 03 இரட்டைக் குளிரூட்டும் நீர்ப்பம்பிகளை கொள்வனவு செய்து அவை பொருத்தப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. அந்த மூன்று நீர்ப்பம்பிகளுக்காக பழுதுபார்த்தலொன்று அவசியமற்ற போதிலும், ரூபா 939,100 பெறுமதியான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அந்த உதிரிப்பாகங்களும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

## 3.17 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வுப் பந்திகள்

பாராளுமன்றத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்தால் தீர்க்கப்படாதிருந்த பந்திகளின் தொடர்பு பின்வருமாறு

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 1.1 | நிலையானச் சொத்துக்களின் பதிவேடு |
| | 1.2 (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்வு நடைமுறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப் பட்டிராமை. |
| | 1.2 (இ) | பெற்றோர் அடிப்படையில் இணைத்துக்கொள்ளல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2013 | 1.6 (அ) (i) | பாராளுமன்ற பதவியணிக்கு வருடாந்த சம்பள படியேற்றத்திற்கு மேலதிகமாக 10 சம்பளப் படியேற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| | 1.6 (அ) (i) | பாராளுமன்றத்தின் பதவியணிக்கான சம்பளம், படிகள் மற்றும் விடுமுறைகள் போன்றன தொடர்பில் நிதிப்பிரமாணம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.18 முகாமைத்துவ நலிவுகள்

முன்னர் பேணப்பட்ட களஞ்சிய தரவு கட்டமைப்பு 2012 ஆம் ஆண்டின் போது புதிய களஞ்சிய தரவுக் கட்டமைப்பிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் பதிவு

செய்யப்பட்டிருந்த 511 விடயங்களின் பெறுமதி 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் புதிய தரவு கட்டமைப்பினுள் உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக்குவதற்கு முடியாது போயிருந்தது.

## 3.19 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 106 | 100 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 138 | 106 | 32 |
| (iii) | இரண்டாம் நிலை | 276 | 191 | 85 |
| (iv) | ஆரம்ப நிலை | 524 | 484 | 40 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த/ அடிப்படை) | 86 | 82 | 04 |
| | **மொத்தம்** | **1,130** | **963** | **167** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 167 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாமல் 04 சந்தர்ப்பங்களின் போது வருடாந்த சம்பளப் படியேற்றத்திற்கு மேலதிகமாக 10 சம்பளப் படியேற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன.